# தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

கூகுள் மற்றும் தமிழ்நாடு அரசு மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கூடிய செயல்பாட்டு சூழல் அமைப்பை நிறுவுதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது

தமிழ்நாடு அரசு மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களை அமைக்க உள்ளது. கூகுள் நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் புதிய சாதனைகளுக்கான முன்னேற்றத்தை மேம்படுத்த உதவுவதோடு, ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலை சார்ந்த சாதனைகள், திறன் மேம்பாடு போன்ற பகுதிகளில் வளர்ச்சியை வழிநடத்த உள்ளது.

இன்று கூகுள் நிறுவனம் தமிழ்நாட்டில் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான புதுமைகளை ஊக்குவிக்க, தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், திறன் மேம்பாடு மற்றும் சிறு, குறு நிறுவனங்கள் உட்பட தொழிற்சாலை சார்ந்த மேம்பாடு போன்ற முக்கிய பகுதிகளில் முன்னேற்றங்களை மேம்படுத்த உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கூகுள் நிறுவனத்தின் மவுண்டன் வியூ அலுவலகத்தில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் கையெழுத்தானது. கூகுளின் கிளவுட் தளத்தின் தலைவர் அமித் ஸவேரி, கூகுள் பிக்ஸல் வணிக அலகின் துணைத் தலைவர் நந்தா ராமச்சந்திரன் மற்றும் தமிழ்நாடு அரசின் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (Guidance தமிழ்நாடு) ஆகியோர் கையொப்பமிட்டனர். இந்த புரிந்துணர்வு பரிமாற்றத்தின் போது தமிழ்நாடு தொழில்துறை, முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் மற்றும் Guidance தமிழ்நாடு நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, கூகுள் நிறுவனம் தமிழ்நாடு அரசின் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (Guidance தமிழ்நாடு) உடன் இணைந்து, ஒரு வலுவான செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டு சூழலை உருவாக்க உள்ளது. இது நுட்பமான தொழில்நுட்பங்கள் மற்றும் வளங்களை அணுகக்கூடியதாகவும், மேலும் தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு அமைப்புகள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உலகளாவிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உதவுவதை மையமாகக் கொண்டு வலுவான செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டு சூழலின் வளர்ச்சியை ஆதரிக்கும்.



தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா பேசுகையில், "தமிழகத்தில் தயாரிக்கப்பட்டு வருவதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மேட் இன் இந்தியா பிக்சல் 8 போன் உட்பட மேம்பட்ட உற்பத்தியில் கூகுளுடன் இணைந்து தமிழ்நாடு செயல்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இன்று கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களின் கீழ் முக்கிய செயற்கை நுண்ணறிவு (AI) முயற்சிகளை ஆராயும். கூகுள் உடனான எங்களின் கூட்டாண்மை, தமிழ்நாட்டை ஒரு செழிப்பான செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக நிறுவுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். இதன் மூலம் நாம் தொழில்நுட்பத்தை மட்டும் பின்பற்றவில்லை, எதிர்காலத்தில் நமது மாநிலத்தை முன்னெடுத்துச் செல்ல அதன் சக்தியைப் பயன்படுத்துகிறோம். முதலமைச்சரின் தொலைநோக்கு பார்வைகொண்ட 'நான் முதல்வன்' திட்டம், இந்தியாவின் மிகப்பெரிய திறன் மேம்பாட்டு முயற்சியாகும். இது தமிழக இளைஞர்களை எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு திறன்களுடன் தயார்படுத்தி, ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், சுகாதாரம் போன்ற முக்கிய துறைகளில் உள்ள சவால்களை சமாளித்து, புதுமைகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். 2 மில்லியன் இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துவதற்காக அதி நவீன செயற்கை நுண்ணறிவு திறன்களைக் கொண்டு அவர்களை தயார்படுத்த தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் கூகுள் உடனான முயற்சிகளை ஆராய்வதற்கு நாங்கள் காத்திருக்கிறோம்" என்றார்.

Google Cloud தளத்தின் தலைவர் அமித் ஜவேரி கூறுகையில், "செயற்கை நுண்ணறிவுடன் இயங்கும் எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த புரிந்துணர்வு, செயற்கை நுண்ணறிவு மூலமாக பரந்த அளவிலான வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நமது பகிர்ந்த பொறுப்பைக் காண்பிக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு பலம் வாய்ந்த செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டு சூழலை உருவாக்குவதற்காக இணைந்து வேலை செய்ய எதிர்நோக்குகிறோம். இது புதுமைகளை இயக்குவதற்கும் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் மட்டுமல்லாமல், டிஜிட்டல் யுகத்தில் வெற்றி பெற தேவையான திறன்களைக் கொண்ட நபர்களை அதிகாரமாக்கும்" என்றார்.

கூகுள் மற்றும் தமிழ்நாடு அரசு கீழ்காணும் முக்கிய பகுதிகளில் ஒத்துழைப்புகளை ஆராய்ந்து வருகின்றன:

**பிக்ஸல் 8 மொபைல்களின் உற்பத்தி:** இந்தியாவில் தயாரிக்கப்படும் பிக்ஸல் 8 சாதனங்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் கூட்டாளிகளுடன் தயாரிக்கப்படுதல்.

**திறன் மேம்பாடு மற்றும் கல்வி:** கூகுள், தமிழ்நாட்டின் இளைஞர்களை செயற்கை நுண்ணறிவு திறன்களுடன் மேம்படுத்த அரசுடன் இணைந்து பணி புரியும். 'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாட்டு தளத்தின் கீழ், செயற்கை நுண்ணறிவு கற்றல் முன்மொழிவுகளை ஆராய்வது மற்றும் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தி, எதிர்காலத்திற்கான இளைஞர்களை உருவாக்கும் திட்டங்களை முன்மொழிவது.



**ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் புதுமையான முயற்சிகள்:** கூகுள், தமிழ்நாட்டின் ஸ்டார்ட்அப் நிறுவ னங்களுடன் இணைந்து, Google வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப தலைவர்களுடன் மேற்பார்வை மற்றும் தகவல் தொடர்பை வழங்கும். செயற்கை நுண்ணறிவை மையமாகக் கொண்டு உள்ளூர் சவால்களை தீர்க்கவும், சமூகத்தில் புதுமை மற்றும் பிரச்சினை களுக்கான தீர்வை ஊக்குவிக்கும் வடிவமைப்புடன் செயல்பட உள்ளது. கூகுள் தகுதியான ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு தொழில்முனைவோர் நிதியுடன் கூடிய

கிளவுட் கிரெடிட்கள், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வணிக ஆதரவை வழங்கி, அவர்களின் வளர்ச்சியை வேகமாக்கும்.

**சிறு குறு நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற பொருளாதாரம்:** தமிழ்நாட்டின் சிறு குறு நிறுவனங்கள் உயர்வு பெற கூகுள் மற்றும் கூகுள் கிளவுட், தமிழ்நாடு அரசுடன் இணைந்து கூகுள் கிளவுட் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை திறந்த நெட்வொர்க் சந்தையில் பயன்படுத்த உதவிக் கூடிய முயற்சிகளை மேற்கொள்வார்கள். இது எளிதாக அணுகலை உருவாக்க, செயல்களை தானாகச் செய்ய, முடிவெடுத்தலை மேம்படுத்த, மற்றும் தொழில்நுட்பப் பயன்படுத்தலின் மூலம் புதுமையை ஊக்குவிக்க உதவுகிறது.

கூகுள், சமூகத்திற்கு அதிக அக்கறை அளிக்கும் செயற்கை நுண்ணறிவை உருவாக்க முனைகிறது. இதன் சவால்களை எமது செயற்கை நுண்ணறிவு விதிகளின் அடிப்படையில் கையாள்கிறது. உலகின் மிக அவசரமான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உருவாக்க அடிப்படையான ஆராய்ச்சியின் மூலம் எங்களை முன்னேற்றுகிறது. பரந்த சமூகங்களுடன் ஒத்துழைப்பது, உண்மையான தாக்கத்துடன் முன்னேற்றத்தை விரைவாக சாதிக்க உதவுவதோடு, இந்த மாற்றியமைக்கும் தொழில்நுட்பங்களை நாகரிகமாகவும் பாதுகாப்பாகவும் முன்னேற்றுவதை எங்கள் நோக்கம்





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.08.2024) சென்னை ஃபார்முலா ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டியினை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வருகையை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் விழாவில் பங்கேற்பது குறித்தும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஒசூர், செப். 2 - கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம், ஒசூரில் நேற்று நடை பெற்றது. அவைத்தலைவர் யுவ ராஜ் தலைமை வகித்தார். மேயர் சத்யா வரவேற்றார். ஒன்றிய செயலாளர் சீனிவாசலு ரெட்டி, திவாகரன், ரகு நாத், நாகேஷ், கஜேந்திர மூர்த்தி, பாக்கியராஜ், சின்ராஜ், கருணாகரன், ஸ்ரீதர், ராஜா(எ) தணிகாசலம், பேரூர் செயலாளர் சீனிவாசன், தஸ்தகீர், மாநகர நிர்வாகிகள் செந் தில்குமார், கோபாலகி ருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, தியாகராஜ் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம் எல்ஏ ஆகி யோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் ஒசூரில் இருந்து விமான சேவைக்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்க சென்றுள்ள முதல்வருக்கு மேற்கு மாவட்ட திமுக சார்பில் வாழ்த்து தெரிவிப்பது, மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதிகளில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது. 2ம் கட்ட புதிய உறுப்பினர்கள் அட்டை வழங்குவது, வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் ஓஎம்ஆர் படிவம் விரைவாக வழங்குவது உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், மாவட்ட துணை செயலாளர்கள் முருகன், முன்னாள் எம் எல்ஏ சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வீரா ரெட்டி, எல்லோரா மணி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் மற்றும் விஜயகுமார், அரியப்பன், ஜெயராமன், சீனிவாசன், தனலட்சுமி. அருணா பூசன்குமார், முனிராஜ், அப்துல் கலாம், ஷேக் ரஷீத், சரோஜினி பரசு ராமன், யசோதா நட்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திம்மராஜ் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் ப.ச.சுரேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி. ஆர்.ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர் ஷபீர்அகமத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மு.பழனி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் சி.குணசேகரன் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.